ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1842/17 - 2013 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.12.27

1842/17 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் இண்டின் 28 ஆம் இலக்க ,காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல . : கொட்/காணி/எடுத் 01/01(கள/3529).

காணி அமைச்சின் குறிப்பு இல.: காணி/4/5/2010/ஈ/291.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழக்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**காணியின் விபரம் :-**

தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் காட்டபொல பிரதேசச் செயலாளரின் பிரிவில் கொட்டபொல - வட இல. (242) கிராம உத்தியோகத்தரின் பிரிவின் கொட்டபொல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவை நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இ.கி. வரைப்படத்தில் இல. 45 இல் தாள் 115 இல் பிற்சேர்க்கை இல. 87 இல் காணித்துண்டின் எல்லைகள்:

முதலாவது உரிமை கோருபவர்:- கொட்டபொல குருந்துவத்தையில் வசிப்பவரான ஜகத் சந்தன அபேகுணவர்தன.

காணித்துண்டு இல. 2294 விஸ்தீரனம் சுமார் ஹெக்டயார் 0.8094.

வடக்கு: துண்டு இல. 515 மற்றும் 1766 ; கிழக்கு: துண்டு இல. 1766 ;தெற்கு : துண்டு இலக்கம் இடப்பலாத தொல மற்றும் துண்டு இல. 515 ; மேற்கு : துண்டு இலக்கம் இடப்பலாத தொல மற்றும் துண்டு இல. 515.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரன் முகாமை 2014 ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொட்டபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்ளையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முழுப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கனேஷ அமரசிங்க,
பிரதேச செயலாளர்
கொட்டபொல.

பிரதேச செயலகம்,
கொட்டபொல,
2013, திசெம்பர் 24.

1-360

**திருத்தம்**

**1964 ஆம் இண்டின் 28 ஆம் இலக்க ,காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்திபட்டவாறான காணி எடுத்தள் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல . : கொட்/காணி/எடித்/1/61.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03ஜ/81/ஈ/256.

இல. 695/17 ஆம் இலக்க 1992.01.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மேல் தலைப்பின் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் குறித்த உரித்துச்சாரா விசாரணை நடைபெறும் திகதி கீழ்க் குறித்தப்படி திருத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

| இரத்துச் செய்யப்படும் திகதி | திருத்தப்பட்ட திகதி |
|---|---|
| 1992.03.27 | 2014.02.18 |

கனேஷ அமரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கொட்டபொல.

பிரதேச செயலகம்,
கொட்டபொல,
2013, திசெம்பர் 24.

1-361